# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2086 - 2018 අගෝස්තු මස 24 වැනි සිකුරාදා - 2018.08.24

*2086 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | 158 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 160 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.***- *இலங்கை மின்சாரம் (திருத்தம்) சட்டமூலம் 2018, ஓகத்து மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2018, செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

157- B81442-353(2018/08)

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள உக்குவளை பிரதேசச் செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஈ. டபிள்யூ. என். ஏ. எகொடவெல ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1982.03.29 ஆந் திகதி வழங்கப் பட்டுள்ள மாத்தளை/ப்ர/208 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான உக்குவலை குரோவத்த கொலனி இலக்கம் 26 எனும் முகவரியில் வசிக்கும் சையிபு அப்துல் அசீஸ் என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாத்தளை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மா/ 1/ 149 ஆம் இலக்கத்தின் கீழ் 1982.09.30 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

### அட்டவணை

*மாத்தளை நிருவாக மாவட்டத்தின் உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவின் மாத்தளை மெதசிய பற்றில் வாரியபொல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வாரியபொல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஐ 20/5, 13, 14 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட மா 2463 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 26 ஆம் இலக்கக் காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 00 ஏக்கர் , 01 றூட், 37 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு :-*

வடக்கு : துண்டு இல. 13 (பாதை) ;
கிழக்கு : துண்டு இல. 23 ;
தெற்கு : துண்டு இல. 13 (பாதை) ;
மேற்கு : துண்டு 27.

ஈ. டபிள்யூ. என். ஏ. எகொடவெல,
பிரதேச செயலாளர்,
உக்குவலை.

2018, ஏப்பிறல் 27.

8- 779/1

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள உக்குவளை பிரதேசச் செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஈ. டபிள்யூ. என். ஏ. எகொடவெல ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1982.03.29 ஆந் திகதி வழங்கப் பட்டுள்ள மாத்தளை/ப்ர/215 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான உக்குவலை குரோவத்த கொலனி இலக்கம் 34 எனும் முகவரியில் வசிக்கும் ஹேன்பிட கெதர பீட்டர் என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாத்தளை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மா/ 1/ 154 ஆம் இலக்கத்தின் கீழ் 1982.09.30 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட வில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படு கின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

### அட்டவணை

*மாத்தளை நிருவாக மாவட்டத்தின் உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவின் மாத்தளை மெதசிய பற்றில் வாரியபொல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வாரியபொல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஐ 20/5, 13, 14 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட மா 2463 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 34 ஆம் இலக்கக் காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 00 ஏக்கர் , 01 றூட், 29 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு :-*

வடக்கு : துண்டு இல. 13 (பாதை) ;
கிழக்கு : துண்டு இல. 13 (பாதை) ;
தெற்கு : துண்டு இல. 13 (பாதை) ;
மேற்கு : துண்டு 35.

ஈ. டபிள்யூ. என். ஏ. எகொடவெல,
பிரதேச செயலாளர்,
உக்குவலை.

2018, ஏப்பிறல் 27.

8- 779/2

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாண சபையின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள உக்குவளை பிரதேசச் செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஈ. டபிள்யூ. என். ஏ. எகொடவெல ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1991.05.15 ஆந் திகதி வழங்கப் பட்டுள்ள மத்யம/ உகு/ 02 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான எல்வல வாரியபொல சீ கொலனி இலக்கம் 49 எனும் முகவரியில் வசிக்கும் வை. ஏ. ஜீ. லைசா என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாத்தளை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மா/120/1200/91 ஆம் இலக்கத்தின் கீழ் 1991.11.19 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

மாத்தளை நிருவாக மாவட்டத்தின் உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவின் மாத்தளை மெதசிய பற்றில் எல்வல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வாரியபொல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 54/4/1/(ஜ 20/5) ஆம் இலக்க வெளிக்களத் தாளில் மற்றும் மா. 660 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைப்படத்தில் 49 ஆம் இலக்கக் காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 0.103 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு :-

வடக்கு : துண்டு இல. 46 ;
கிழக்கு : வீதி ;
தெற்கு : வீதி ;
மேற்கு : துண்டு இல. 50.

ஈ. டபிள்யூ. என். ஏ. எகொடவெல,
பிரதேச செயலாளர்,
உக்குவலை.

2018, ஏப்பிறல் 27.

8- 779/3

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாண சபையின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள பல்லேபொல பிரதேசச் செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் விஜேகோன் முதியன்சேலாகே ஆனந்த ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1992.08.06 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/ப/பொ/111 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான வெலிகந்த அகுரம்பொட எனும் முகவரியில் வசிக்கும் பாரே கெதர என்சோ என்பவருக்கு கையளிக்கப்பட்டு, மாத்தளை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் அ/495/1280/93 ஆம் இலக்கத்தின் கீழ் 1993.09.11 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.09.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

மாத்தளை நிருவாக மாவட்டத்தின் பல்லேபொல பிரதேச செயலாளர் பிரிவின் உடுகொட உடசிய பற்றில் /கோறளையிலுள்ள மெதலந்த கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அகுரம்பொட வெலிகந்த எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், மாத்தளை நில அளவையாளர் அத்தியட்சகரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள தும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இறுதி கிராம வரைபடத்தில் 32 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் 384 ஆம் இலக்கம் காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 01 ஏக்கர் , 08 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு :-

வடக்கு : துண்டு இலக்கம் 381 ;
கிழக்கு : துண்டு இலக்கம் 102 மற்றும் துண்டு இலக்கம் 104 ;
தெற்கு : துண்டு இலக்கம் 387 ;
மேற்கு : துண்டு இலக்கம் 379.

டபிள்யூ. எம். ஆனந்த,
பிரதேச செயலாளர்,
பல்லேபொல.

2018, மே 09.

8 - 920

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல :- 4/10/54769
பிரதிக்காணி ஆணையாளாரின்
இல. :- EP/28/LB/tri/vim/Gen/2017

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வில்கம் விகார கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வில்கம் விகார கிராமத்தில் அமைந்துள்ளதும் காணித்துண்டு இலக்கம் A எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் ஹெக்ரயர்ஸ் 0.2023 விஸ்திரமுள்ளதுமான அரச காணியை பயிர் செய்கை நோக்கத் திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டு ஏ. டபள்யூ. குணவர்தனே விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : மாநில நிலம் ;
கிழக்கு : பாதை ;
தெற்கு : மாநில நிலம் ;
மேற்கு : பாதை.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது:-

(அ) **குத்தகைக் காலம்** :- முப்பது (30) வருடங்கள் (2018.07.12) தொடக்கம்;

**வடாந்தக் குத்தகை** :- குத்தகையானது அமுல் படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ரூபா ஐந்து மில்லியனை விட (ஐந்து மில்லியன் 50,00.000) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான வலை மதிப்பாட்டாளரின் விலை மதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட (ஐந்து மில்லியன் 50,00,000) தாண்டும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டளாரின் வலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப் படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது எல்லா ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் முந்தைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்திற்கு சேர்க்கப்பட வேண்டும்;

தவணைப்பணம்.- தவணைப்பணம் அறவிடப்பட மாட்டாது;

(ஆ) குத்தகைக்காரினால் குத்தகை ஆரம்பித்த திகதி யிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனத் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரினால் இக்காணி பயிர் செய்யும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப் படல் கூடாது;

(ஈ) பிரதேசச் செயலாளர், இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2018.07.12 ஆம் தினத்திலிருந்து குறைந்தது 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், கீழ்க்குத்தகைச் செய்தல் அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப் பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஏ. கே. என். செவ்வன்தி அமரசேகர,
உதவிக் காணி ஆணையாளர் (காணி),
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகெதமெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, ஓகத்து 24.

08-776

காணி ஆணையாளர் நாயகத்தின் இல :- 4/10/44814
மாகாண காணி ஆணையாளாரின்
இல. : - என்சிபி/பிஎல்சி/எல்4/10/04

## முடிக்குரியகாணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம் கிழக்கு நுவரகம்பலாத பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 252 கட்டம் ii, கிராமஅலுவலர் பிரவைச் சேர்ந்த கட்டம் ii கிராமத்தில் அமைந்துள்ளதும் அ. ந. பி. அ. 03 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 793 1/2 மற்றும் காணித்துண்டு 794 இன் ஒரு பகுதியை காட்டுகின்ற சுவடு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.1012 ஹெக்டயர் விஸ்தீரமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டுத் திரு. ஹேரத் பண்டா சேமசிங்க என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத் தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : வீதிக்கான ஒதுக்கு மற்றும் காணி அலுவலரினால் வரயப்பட்ட சுவடு வரைபடத்தில் துண்டு இலக்கம் 02;
கிழக்கு : காணி அலுவலரினால் வரயப்பட்ட சுவடு வரைபடத்தில் துண்டு இலக்கம் 02;
தெற்கு : காணி அலுவலரினால் வரயப்பட்ட சுவடு வரைபடத்தில் துண்டு இலக்கம் 02 மற்றும் அ. ந. பி. அ. 03 வரைபடத்தில் காணித்துன்டு இலக்கம் 793;
மேற்கு : வீதி ஒதுக்கு மற்றும் அ.ந.பி.அ. 03 வரைபடத்தில் காணித்துன்டு இலக்கம் 793.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது:-

(ஆ) **குத்தகைக் காலம்** :- முப்பது (30) வருடங்கள் (2018.06.25) தொடக்கம்;

**வருடாந்தக் குத்தகை** :- 2018 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 50,00,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப்பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2018 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியதுக்கு (ரூ. 50,00,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும்; இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும் ஆயினும் திருத்தியமைக்கப் பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டிகொள்ளுதல் வேண்டும்;

தவணைப்பணம் :- அறவிடப்படமாட்டாது;

(ஆ) குத்தகைக்காரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்தவேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப் படல் கூடாது;

(ஈ) பிரதேசச் செயலாளர் மற்றும் வேறு நிறுவனங் களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனை கட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2018.06.25 ஆந் தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவுபெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வ தற்கான கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்படமாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்டவேறு நிறுவனங் களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனை கட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட

தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்கு கிடைக்கத் தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதிபிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹகெதமெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018.08.24.

08-777

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/53274.
பிரதிக்காணி ஆணையாளரின் இல. : EP/28/LB/LS/Tri/KU/82.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திரியாய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த திரியாய கிராமத்தில் அமைந்துள்ளதும் காணித்துண்டு இலக்கம் ஏ எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் ஏக்கர் 5 விஸ்தீரமுள்ளதுமான அரச காணியை பயிர் செய்கை நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டு எல்.ஜி.டிஸ்னா பிரியந்தி என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : கடல் ;
கிழக்கு : கடல் ;
தெற்கு : வீதி ;
மேற்கு : பாதை.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்டும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்டும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2018.06.25) தொடக்கம் ;

**வருடாந்தக் குத்தகை.**- குத்தகையானது அமுல் படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி யானது ரூபா ஐந்து மில்லியனை விட (ஐந்து மில்லியன் 50,00,000) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலை மதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் மதிப் பீட்டுப் பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா 5,000,000) தாண்டும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது எல்லா ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் திருத்தம் 20 சதவீதத்தைச் சேர்க்க வேண்டும்;

தவணைப்பணம்.- தவணைப்பணம் அறவிடப்பட மாட்டது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதி யிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலா ளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி பயிர் செய்யும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேசச் செயலாளர், இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்டும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 05.07.2017 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், கீழ்க்குத்தகைக் செய்தல் அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதியளிக்கப் படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களைக் கீழே குறிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஏ.கே.என். செவ்வன்தி அமரசேகர,
உதவிக் காணி ஆணையாளர் (காணி),
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, 08.24

08 - 778

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.